# புதிய அடிமைக



கணபதி கணே
முல்லைஅமுதன்

JPL
C4130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய அடிமைகள்

கவிதைகள்

பொது சன நூலகம்
26 FEB 100
மாநகராட்சி மன்ற
யாழ்ப்பாணம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

கணபதி கணேசன்
முல்லை அமுதன்

118840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

First Edition
December 1983

# "PUTHIYA ADIMAIGAL"

THE SELECTED POEMS OF
KANAPATHY GANESHAN
&
MULLI AMUTHAN

894.8111
2

Cover Design by:
S. MAHANDRAN

Published by:
MEHAM
8/2, Sivan Kovil South Lane,
Thirunelvely,
Jaffna:

Printed by:
GOWRIY PRINTERS
216, Manipay Road,
Oddumadam,
Jaffna.

PRICE 12.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

ஈழத்தின் இலக்கியச்
செழுமைக்குத் தங்கள்
பங்களிப்பை நல்க
வேண்டும் என்ற
நல்லெண்ணத்தில் தோன்றி
மறைந்து போன
ஈழத்துச் சஞ்சிகைகளுக்கு
இச்சிறு நூல்
காணிக்கை...!

KOHA
JP



கணபதி கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு குறிப்புரை

இத்தொகுப்பில் உள்ள
கவிதைகளிற் சில
வீரகேசரி, தினகரன்,
ஈழநாடு ஆகிய
பத்திரிகைகளிலும்,
தீர்த்தக்கரை, சுடர்,
மேகம், மாருதம் (1980),
கலாச்சாரம், நூதனவிடியல்,
சிரித்திரன் ஆகிய
சஞ்சிகைகளிலும்
வெளிவந்திருந்தன.
ஏனையவை முதன்முதலாக
அச்சேறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு முன்னுரை

KOHA
JPL

கவிதையாற்றல் என்பது கடவுளின் அருட்கொடை என்றும், கருவிலே திருவுடையார்தாம் கவிஞராகலாம் என்றும் ஒருகாலத்தில் நம்பப்பட்டது. ஆனால் இன்று அந்த நிலைமாறி எழுத்தில் பயிற்சியுடைய எவருமே சுலபமாகக் கவிதை எழுதலாம் என்ற நிலைமை உருவாகியுள்ளதை நாம் காண்கின்றோம். நாள்தோறும் பெருகி வரும் கவிஞர்களின் எண்ணிக்கையும், பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவரும் கவிதைகளின் தொகையும் இதை உறுதிப்படுத்துகின்றன. ஒரு சிறுபான்மையினரான, மொழிப் புலமைமிக்க உயர் குழாத்தினருக்கே சாத்தியமாக இருந்த கவிதை இவ்வாறு எல்லோருக்கும் சாத்தியமான ஒன்றாக மாறியிருப்பது மகிழ்ச்சிக்குரியதே. கவிதை இலக்கியத்தை இவ்வகையில் ஜனநாயகப் படுத்திய பெருமை புதுக்கவிதைக்கே உரியது எனலாம்.

புதுக்கவிதையின் ஆக்குதிறன் பற்றியும் அதன் நுட்பங்கள், சிக்கல்களைப் பற்றியும் உயர் விமர்சன மட்டத்திலும் பெருங்கவிஞர்கள் மட்டத்திலும் எத்தகைய கோட்பாடுகள் நிலவிய போதிலும், புதுக்கவிதை கருத்து வெளியீட்டுக்குரிய ஓர் இலகுவான சாதனமாக உருவாகி இருப்பதை நம்மால் அவதானிக்க முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் சிந்தனைகளையும் உணர்வுகளையும் எவ்வித யாப்புப் பயிற்சியும் அவசியம் இல்லாது, இலகுவாகவும் சுலபமாகவும் வெளிக்காட்டுவதற்கு கவிஞர்களுக்குப் புதுக்கவிதை வழி திறந்துவிட்டுள்ளது. அதனால் கவிஞர்களாவது முன்பு எப்போதையும் விட இலகுவானதாகிவிட்டது. வெண்பா, அகவல், விருத்தம், கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை போன்ற வரையறையான, சிக்கலான யாப்புச் சட்டகங்கள் எதுவும் புதுக்கவிதைக்கு இல்லை. கவிதை வாக்கியத்தை மேலிருந்து கீழ் நோக்கிய வரிசை அமைப்பில் ஒழுங்குபடுத்துவதே புதுக்கவிதையின் யாப்பு ஆகும். இதற்கு எந்த விதமான வரையறையும் ஒழுங்கு முறையும் கிடையாது. அவ்வகையில் இது யாருக்கும் இலகுவில் கைவரக்கூடிய ஒரு யாப்பு முறையாகும். நான் இவ்வாறு கூறும் போது புதுக்கவிதையின் தகைமையைக் குறைத்து மதிப்பிடுவதாக யாரும் கருதத் தேவையில்லை. அதன் அடிப்படைப் பண்பான எல்லோருக்கும் எட்டக்கூடிய இலகுத் தன்மையை வலியுறுத்தவே நான் இதைக் கூறுகின்றேன். இந்த இலகுவான யாப்பு முறையூடாக உன்னதமான அனேக கவித்துவ வெளிப்பாடுகளை நாம் கண்டுள்ளோம். அதுபோல் ரொம்பச் சராசரியான ஆக்கங்களையும் நாம் ஏராளமாகக் காண்கின்றோம். மரபுவழி யாப்பிலும் அமைந்த கவிதைகளில் கூட நாம் இந்நிலையைக் காணலாம். அவ்வகையில் பார்க்கும் போது கவிதையின் மேலோட்டான யாப்பு வடிவமன்றி கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞனின் நுண் உணர்வும் கலையாற்றலுமே கவிதை யின் மேலான தரத்தை இறுதியாக நிர்ணயிக் கின்றன என்று கூறலாம்.

இலங்கையிலே 1930களின் பிற்பகுதியில் இருந்து புதுக்கவிதை எழுதப்படலாயிற்று எனி னும் 1970களின் பிறகுதான் இங்கு அது ஒரு பிரதான கவிதை வடிவமாக வேரூண்றியது. இக்காலப் பகுதியில்தான் ஏராளமான இளை ஞர்கள் கவிதை எழுதத் தொடங்கினர்கள். புதுக்கவிதை இவர்களுக்கு ஓர் இலகுவான கருத்து வெளிப்பாட்டுச் சாதனமாக அமைந்தது. சிறந்தவை சிலவும், நல்லவை பலவும், சராசரி யானவை மிகப் பலவும், மோசமானவை மிக மிகப் பலவும் என பலதிறப்பட்ட புதுக்கவிதை கள் ஆயிரக்கணக்கில் இதுவரை பிரசுரமாயுள் ளன. பல புதுக்கவிதைத் தொகுப்புக்களும் வெளி வந்துள்ளன. ஈழத்தில் புதுக்கவிதையின் தார தம்மியங்கள் எவ்வாறிருப்பினும் தமிழகத்தைப் போல் இங்கும் அது ஒரு பிரதான கவிதை வடி வமாக நிலைபெற்று விட்டது என்பதில் ஐயமில்லை.

இப்பின்னணியிலே இப்போது **புதிய அடிமை கள்** என்னும் இப்புதுக்கவிதைத் தொகுதி வெளி வருகின்றது. 1970களின் பிற்பகுதியிலே எழுத் துத் துறையில் புகுந்த கணபதி கணேசன், முல்லை அமுதன் ஆகிய இரு கவிஞர்களின் 50 கவிதை களைக் கொண்டது இத்தொகுதி. இருவரின் கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் போக்குகளிலே உள்ள சில ஒற்றுமை வேற்றுமைகளை ஒருசேரக் காண்பதற்கு இத்தொகுப்பு நமக்கு உதவும்.

இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான கவிதைகளிலே இவர்களது சமூகச் சார்பு பளிச்செனத் தெரிவதை நாம் அவதானிக்கலாம். ஈழத்துக் கவிதையின் ஒரு பிரதான பண்பு அதன் சமூகச் சார்பாகும். பெரும்பாலும் ஈழத்துக் கவிஞர்கள் எல்லோருமே சமூகப் பொறுப்புணர்வு மிக்கவர்களாக, சமூகப் பிரச்சினைகளில் அக்கறை காட்டுபவர்களாகவே உள்ளனர். பெரும்பாலான தமிழகத்துப் புதுக்கவிஞர்களைப்போல் தங்களுக்கென்ற ஒரு தனி உலகுள் நின்று சித்து விளையாடுவோர் ஈழத்தில் இல்லை என்றே கூறலாம். இத்தொகுப்பில் உள்ள கவிதைகளிலே பலஸ்தீனப் பிரச்சினை போன்ற சர்வதேசப் பிரச்சினை முதல் பல்வேறு சமூக பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் வரை கையாளப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். இச் சமூகச் சார்பு இக் கவிதைத் தொகுதியின் ஒரு பலம் எனலாம். இத்தொகுப்பில் உள்ள சில கவிதைகளிலே சமூகச் சார்பு கவித்துவ வீச்சோடு வெளிப்படுவதைக் காணலாம். உதாரணமாக:

தேர்தல் வருகிறது
வாக்குறிதிப் புயல்
வந்து மோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமை வீழ்த்தும்
மீண்டும்...
இராவணனே வெற்றி கொள்வான்.

என்ற கவிதையைக் காட்டலாம். தேர்தலிலே மக்கள் எப்போதும் ஏமாற்றப்படுகிறார்கள் என்ற சாதாரணமான உண்மை இக்கவிதையிலே ஒரு கவித்துவ வேகத்தைப் பெற்றுள்ளது. வாக்குறிதிப் புயல் வீழ்த்துகின்ற உருவகமும், இராவணன் என்ற இதிகாசக் குறியீடும் இச்சிறிய கவிதையைத் தாக்கமுடையதாக ஆக்கியுள்ளன.

ஆயினும் இத்தொகுப்பில் உள்ள பெரும்பாலான கவிதைகளில் பிரசாரப் பண்பே மேலோங்கித் தெரிகின்றது. இன்றைய பெரும்பாலான ஈழத்துப் புதுக்கவிதைகளின் பிரதானமான குறைபாடும் இதுதான். கருத்துக்களும் உணர்வுகளும் படிமங்களினூடு வெளிப்படுத்தப்படும் போது தான் ஒரு கவிதை சிறந்த கவிதையாகின்றது. நான் மேலே காட்டிய தேர்தல் பற்றிய கவிதையிலே இப்படிச் சிறப்பைக் காணலாம். இத்தகைய கவிதைகள் இத்தொகுப்பில் குறைவாகவே காணப்படுகின்றன. இது ஒரு குறைபாடெனினும் இத்தொகுப்பு இவர்களின் முதல் அறுவடை என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல கவிதையாற்றல் ஏதோ ஒரு அருட்கொடையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறு அல்ல. பயிற்சியினுல் வளர்த்துக் கொள்ளக் கூடியதே. இவ்விரு கவிஞர்களும் எதிர் காலத்திலே தங்கள் கவித்துவ ஆற்றலை மேலும் வளர்த்துக் கொள்ளக் கூடிய திறன் படைத்தவர்கள் என்பதை இத் தொகுப்பு புலப்படுத்துகிறது. தமிழ் இலக்கிய உலகம் அவர்களை ஆதரிக்கும் என்று நம்புகின்றேன்.

எம். ஏ. நுஃமான்

1-1-1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பலஸ்தீன நண்பனுக்கு . . !

இரவில் உதிரும்
நட்சத்திரக் குண்டுகள்
உன் குழந்தையின்
தூக்கத்தைக் கெடுக்கவும் கூடும்;

உன் மார்பில் புரளும்
மனைவியின் கூந்தல்
உன் உணர்வுகளைத்
திசைதிருப்பவும் கூடும்
ஆனாலும்...!

விழிப்பாயிருக்கும் நண்பனே!
எந்நேரமும் விழிப்பாயிரு!
நீ மீட்கத் துடிக்கும்
மண்ணின் உணர்வுகள் — உன்
காலடிச் சுவட்டின்
ஸ்பரிசத்துக்காய்
காத்துக் கிடக்கிறது.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாறு

அழுவதற்கென்றே அமைந்த
வாழ்க்கை இது. .!

அழுவதினுல் ஆவதொன்றும்
இல்லைதான் — ஆனுலும்
கண்ணீர்தான் இங்கெதற்கு?
அழுது தீர்த்திடுக.

தெருவிளக்கில் படித்து
மேதையான வரலாற்றைப்
படித்துக்கொண்டே
தெருவிளக்காய் ஆகிப்போன
என்கதையும் ஒரு வரலாறுதான்.

ஏகாதிபத்தியத்தின் எச்சங்கள்
அழிக்கப்படும் நாள்வருமா?
வரும்...வரும்...!
என்ருே ஒருநாள் வரும்...!

ஆனுல் அதை நாம் கண்டு
மகிழமாட்டோம்! ஏன்?

நாம்தான் அதன் வருகைக்காய்
மாய்ந்து போன வரலாருய்
ஆகியிருப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழைத்தவன் வியர்வை

நபிகள் நாயகம்
நவின்ற அறிவுரை
'உழைத்தவன் வியர்வை
காயுமுன் அவன்கூலி
கொடுத்து விடு'.

நானும் நாட்கூலி
ஒருநாள் கூலி
ஒரு பத்து ரூபா
கையில் கிடைத்தது.

இல்லம் விரைந்தேன்
இல்லத்தரசி
பையோடு நின்ருள்
பொருட்களின் பட்டியல்
தொடர்ந்தது.

தேங்காய் என்ருள்
என் வியர்வை
எண்ணெயாய் வடிந்தது
புளி என்ருள்
கிலி கொண்டேன்
மிளகாய் என்ருள்
அனலாய் எரிந்தது
என்னுடல்......

118840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்குப் பால்மா......
அழுதது குழந்தையல்ல
என்னுள்ளம்;

'உழைத்தவன் வியர்வை...'
என்னிதயம் ஓலமிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4130 C

## மனித எலிகளே
## மன்னித்து விடுங்கள்

நான் சங்கக்கடை மனேஜர்
'சேல்ஸ்மன்' அல்ல
சாமான் நிறுக்கின்றேன்.

ஏன் சிரிக்கிறீர்கள்?
'சேல்ஸ்மன்'
கதிரையில் இருக்கின்றார்.

உங்கள்
அரிசியை நிறுத்து
ஒரு பிடி அள்ளுகின்றேன்
சீனியின் தட்டை
தராசில் அழுத்துகிறேன்

தட்டுப்பாட்டுச் சாமான்
தட்டுப்பாடுதான்
'கஸ்டமர்'
கூப்பாடுதான் மிச்சம்.

வெளியில் மலிந்த சாமான்
பில்லில் விழுவதில்லை
பல்லை நறுமாதீர்கள்.
உண்மையைச் சொல்லுகின்றேன்
அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை விழுங்கும்
பெரிய முதலைகள்
பெரிய தராசில்
பெரிய மூடையில்
பெரிய வெட்டு
அங்கே நடக்கிறது
அதைக் கேட்க
ஆட்களில்லை.

துணிந்து கேட்ட
நண்பன் ஒருவன்
தொழிலை இழந்து
துயரப்படுகின்றான்.

நான் அவ்வளவு
முட்டாள் அல்ல,
துண்டு விழுவது
என் சம்பளமுமல்ல.

உங்கள் அரிசி
உங்கள் அங்கத்துவம்;
மனித எலிகளை
மன்னித்து விடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுவடை

பசியெடுக்கப் புசிக்கின்ற
பணம் படைத்தோர்
முன்னே...!

பசி கிடந்து
கண்டெடுத்தே உண்கின்ற
கூலிப் பட்டாளம்!

நாமிவர்கள்
வயலின் அறுப்புக்கள்
கெட்டாலும் விட்டாலும்
எமக்கே துடிப்புக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானோதயம்

வாக்குப் போட்டவர்
வரவேற்பு விழாவில்
அரசியல் பிரமுகர்
அறிவுரை பகர்கின்றார்...

''மண்ணின் மாண்பை
உயர்த்தும் வாழ்வின்
ஜீவன் எல்லாமே
கிராமங்களில்தான்...''

''இம்மி கூட
இடம்பெயராதீர் — ''

முன்றலிலே சில
முணுமுணுப்புகள்...

பட்டணத்தில் குடும்பம்
பாரீசில் பருவமகள்
சுவிஸ் வங்கிக் கணக்கு
சொகுசான வாழ்க்கைமுறை...

தன்நிலை மறந்து
நம்நிலை காண்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்க்க தரிசனம்

அன்றைய எமது
திருமண விழாவின்போது
உனது
அழகான கால்களை
அம்மி மீது
தூக்கிவைக்கச் சொன்னது
காலம் முழுவதும்
நான்தான்
அம்மியில் அரைக்க
வேண்டிவரும்
என்பதைச் சூசகமாக
உணர்த்தத்தானோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேன்மை எதுவுமில்லா**
**மேதினத்து**
**ஊர்வலங்கள்!**

தொழிலாளர்
வியர்வை நாற்றத்தில்
மலர்ந்தது நாகரீகம்.

நெடிதுயர்ந்த ஆலைகளின்
புகைபோக்கிகள்
தொழிலாளர் பெருமூச்சின்
அனற்புகையை
வெளியேற்றும்...

இயந்திர வேகம்
தோற்றுவிட...
தசை நார்கள்
சுதந்திரமாய் இயங்கும்...

ஆலைப்புகை வந்து
மூடும் குடிசைகளும்
ஏழைத் தொழிலாளக்-
குழந்தைகளின் இருமல்கள்
அடுப்புப் புகை காண...
ஆவவிடும் பார்வைகள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலச் சுழற்சிகளில்
ஏழைச் சக்கரங்கள்
மாற்றங்கள் ஏதுமின்றி
மறுபடியும் சுற்றிவர...

பெட்டி நிறைந்த
பெருமிதத்தில் முதலாளி
முஷ்டி உயர்த்தி...
முறுவலித்துக் கோஷமிட;

மேதின
ஊர்வலங்கள்
மெதுவாக-
நகர்கின்றன.

118840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெழுகுவர்த்தி

இருளில் உருவம் காட்ட
எம்மை நாமே அழிக்கின்றோம்.
நெருப்பில் எரிந்து
மரிக்கின்றோம்.
கதிரவன் ஒளி
கண்டதும் எம்மை
கவனிக்கிறார் இல்லை
மீண்டும்...!
இருள் வரும்
அப்போ நாம் அரசோச்சுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை மகாத்மியம்

காலி வேலையைத்
தேடி ஓடினேன்
முதலாளி மூவர்
'இன்டர்வியூ' வைத்தனர்.

மார்க்ஸ்ஸிஸம் தெரியுமா?
லெனினிஸம் தெரியுமா?
கேள்விக் கணைகளால்
துளைத்தெடுத்தனர்.

எல்லாம் தெரிந்த
என் நண்பர்கள்
ஒன்றும் தெரியாதென்று
வெளியே வந்தனர்.

குறைந்த வேலை
கூடிய வேதனம்,
ஓய்வு நேரம்
தொழிலாளர் ஒற்றுமை,
வேலை நிறுத்தம்,
போராட்டம்... வெற்றி...
எல்லா வினவுக்கும்
இவை என் விடைகள்.

4130 CC

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரண்டலை நன்ருகப்
புரிந்த உனக்கே
வேலை கிடைக்கும் என்றனர்.

'யூனியன் லீடரும்
நாளை நீயே'
சிரிப்புடன் முதலாளி கண்
சிமிட்டிச் சொன்ஞர்.

ஏற்றுக் கொண்டேன்
காலி வேலையை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தடை

மனித நாகரீகத்தின்
வளர்ச்சியில்
இது ஒரு மைல்கல்

பாலியல் ரீதியான
வக்கிரங்களுக்கு
இது ஒரு சாதனம்...!

படைப்பு என்பது
பிரமன் சம்பந்தப்பட்டது
என்பது போய்-
இங்கே ஓர் குளிகைக்குள்
ஒரு குழந்தை அடக்கம்...

மனித சக்தியின்
மாண்பை மறந்து
இயந்திரங்களை நேசிக்க
ஆரம்பித்திருக்கின்றது
இன்றைய உலகு!

அதன் அடிப்படையும்
இதுதான்...!

அறுவைச் சிகிட்சைக்கு
முன்னூறு ரூபா!
அநியாயம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் கதறினாலும்
கைகள் நீளுகின்றனவே!

பணம் என்ற பதத்தை
பலிசாகவே உபயோகிக்கின்றனர்

பாவிகள் இவர்கள்
நிகழ்காலத்தை மட்டுமே நம்பி
ஏமாந்து போகிறார்கள்,
எதிர்காலததை இவர்கள்
எதிர் கொள்ளத் தயங்குகிறார்கள்

இது எங்கே போய் முடியும்
இந்தக் கவிதையைப் போல...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் என்ற மனிதன்

உலகம் உருண்டு
கிடக்கிறது - என்
மனம் போலே!

இறைவா!
என் பிரிய இறைவா ! !
மனிதர்கள்
ஒருவருடன் ஒருவர்
அடிபட்டுச் சாவதை
ஒதுங்கிநின்று - வேடிக்கை
பார்க்கிறுயே - ஏன்...?

அதனுல் தான் - மனிதன்
உன்னைக்
கோவிலுக்குள் பூட்டிவைத்து
திறப்பைத் தன் - இடுப்பில்
சொருகிக் கொள்கிறுனே!

118840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சியம்

மிருகங்கள்
குறுக்கே வளர-
மனிதன் நெடுகி
வளர்கின்றனே! - இது

எதனுல்...?
அவனது இலட்சியங்களும்
வானளாவ இருக்க
வேண்டும் என்பதினுலா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் உலகம் செய்வோம்

அருவருப்பூட்டும்
ஆபாசச் சஞ்சிகைகள்
அரைவேக்காட்டுச்
சினிமாக்கள்
உற்பத்தியாகி
உலா வருகின்றன!

சதை வெறி தூண்டும்
சினிமாக்கள்;
சரசமாடிடும்
சாகஸ வார்த்தைகள்;
ஜாலம் புரிந்திடும்
இலக்கிய வித்தைகள்;
எம்மைச் சுரண்டும்

பள்ளிப் பையனின்
படிப்பைக் கிள்ளிடும்-
பாட்டாளியின் பாக்கெட்டில்
பெற்ற மகனே
கைவைக்கத் தூண்டிடும்...
அறை நிர்வாணத்தை-
திரையில் காட்டிடும்
சினிமா மாயைகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடத்தின் மாண்பை
மகத்தான அதன் வரலாற்றை
திசைதிருப்ப-
வேண்டுமென்றே திட்டமிட்ட
முதலாளித்துவ வேஷங்கள்
இவை.

நச்சு இலக்கியமும்
நலமில்லாச் சினிமாவும்
மனித அறிவை
மூளைச் சலவை
செய்யும்...

மானிட நேயம் உள்ளோர்,
மனிதன் மனிதனாக
வாழ விரும்பினால்
போர்க்கொடி தூக்குங்கள்.

சுட்டெரியுங்கள்
இவற்றை-
சுகம் பெறும்
மனித சமூகம்
துளிர்த்தெழும்
புதிய உலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகம்

பெண்கள் தங்கள்
அழகை இழந்து—
பெருஞ்சுமை
சுமக்க வேண்டும்
என்று தெரிந்தும்
சுகம்காண
விழைவது எதனால்?
சுமையும் ஒரு சுகம்
என்பதினாலா......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞன்

நான் ஒரு காலத்தில்
பிரபல்யம் பெற்ற
கவிஞன் தான்...!

ஆனால்
இப்போது-

காவியுடுக்கும் நிலைக்கு
வந்துவிட்டேன்
காரணம்...?
கவிதைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயைதானா?

உன் மோனத் தவத்தின்
பிரதிபலிப்பால்-
எனது
பிரமச் சாரியத்தின்
ஜீவ விழுதுகள்
உனது மலர்மேனி
தழுவுகின்றன!

இரவு பகல புரியா
இன்பக் கலவியின்
இறுதியில்-
மாயவாழ்வின்
ஜால வித்தைகளை நீ
புரிந்துகொண்டபோது
ஓ...?
என்னை இழந்த
இரவுகள் எத்தனை...?

வானக் கூரையின்
சோக ஒழுக்குகள்!

உன்-
நீளக் கூந்தல் நுனியில்
என் இதயம் ஆடும்...
இழந்துவிட்ட என் இதயத்தின்
ஒளிக்கசிவில்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்துவிட்ட உன் உணர்வுகளை
மீட்டும் கலைஞன் ஆவேன்!

காளை என் நீள விரல்கள்
கன்னியுனை வீணையென
மீட்டும்...
நாளை போய் நாளை
மறுநாள் வந்து-

காமக் கலவியின்
கடைசிப் பக்கத்தில்
நாலு பேரை நம்பி நான்
நலியுற்றுக் கிடக்கையில்
என் நீள விரல்களும்
உன்-
நீளக் கூந்தலும்
பொலிவிழந்தே போகும்!

காலதேவனின்
கொடுங்கரங்கள்
உன்னிடமிருந்து
என்னை-
பிரிக்கும் போது அறிவாய்!
காதல் எவ்வளவு
போலியானது என்று......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4130 C.C

## தனித்துக் கிடக்கும் இதயம்

கொள்ளைகளும் கொலைகளும்
சமூகத்தை குதறியெறிய
ஜனநாயகம் இங்கே-
வாழ்ந்துகொண்டிருப்பதாகப்
பாவலா பண்ணுது!

சுரண்டலைப் போக்கி
மக்கள்-
சுதந்திரத்திற்கு வழிகாட்ட
வேண்டியவர்களே...
சுரண்ட முற்பட்ட
சுவாரஸ்யங்கள் இங்கே
அனேகம் உண்டு.

இடது பாதியாகவும்
வலது பாதியாகவும்
இடது பலதாகவும்
பிரிந்து கிடக்கையில்
இதயம் ஏனோ இங்கே
தனித்துக் கிடக்குது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொர்க்கம்

"என் இறைவனே!
சொர்க்கம் செல்லலாம்
என்னும் ஆர்வத்துடன்
உன்னை நான்
வணங்கியிருந்தால்
சொர்க்கத்தின் கதவை
மூடிவிடு"

பாரசீகப் பெண்கவிஞர்
ருபியாவின் வேண்டுதல் இது!

நான் ஏதும் பாவம்
செய்திருந்தால்
எனக்காகத் திறந்திருக்கும்
சொர்க்கத்தின் கதவை மூடிவிடு
ஆனால் அதற்காக
இப் பூவுலகில்
ஒரு நரகத்தை
எனக்காக - நீ
சிருஷ்டித்து விடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அடிமைகள்

அடிமைகள் நாம்
இப்போது - புதிய
அடிமைகள்!

*சமீபத்தில்தான்
எமது - அடிமைச்
சாசனம் புதுப்பிக்கப்பட்டது!

ஒவ்வொரு தடவையும்
அடிமைச் சாசனம்
புதுப்பிக்கப்பட - நாம்
ஒத்துழைத்து நல்குவதனுல்-
இனித் தொடர்ந்து
சாசனம் புதிப்பிக்கப்படுவது
அவசியமில்லையாம்!

நல்லது தானே!
நலுங்கு பாடுவோம்!!
அடிமைகள் நாம்
இன்று முதல் - புதிய
அடிமைகள்!

* REFERETDUM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருத்தல்

இருளின் முடிவுக்காய்
காத்திருக்கையில்
கோழி கூவிற்று;

இரவின் விடிவும்
இருளின் முடிவும்
ஒன்று தானா?

இரவு முடிந்தது
ஒளியும் வந்தது
இவன் ஏன் இன்னும்
விழித்துக் கொள்ளவில்லை?

மறுபடியும் இருள்...
விடிவு...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடல்

முழுநிலவின் ஒளியில்
உன் முகம் பார்த்து...
காதல் மொழிகள்
பல பேசி...
கனவுகள் கனிந்து
உணர்வுகள் கலங்கி
உதிரங்கள் உருகி
சிதைந்து. .உலர்ந்து...

ஓ...! அந்த நாட்கள்?
அப்போது சொன்னேன்
இதுதான் உலகின்
சுவர்க்கம் என்று. .!

உணர்வுகளின் சங்கமத்தில்
உலகே புரியவில்லை
அன்று...

தினமும் மலரும்
மலர்களை உந்தன்
உதடுகள் என்றேன்.
நிலவை உன்
முகம் என்றேன்.
தேன்... மான்... மீன்
எல்லாம் நீதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவு தேய்ந்து...
தேய்ந்து...-
ஒரு நாள்
காணுமற் போயிற்று

மலர்கள் வாடி
உதிர்ந்து...உலர்ந்து
சருகாய்க் கிடந்தது.

நினைவுகள் மயங்கி
உணர்வுகள் வந்தபோது
உன்னைத் தேடுகின்றேன்
மீண்டும் நீ...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்கவிச் சுவைஞ!
சற்றே நில்...!
நுழையுமுன் ஒன்று
முன்னுரைதான் இது என்-
எழுத்தின் முடிவுரையல்ல...
புரிந்துகொள்!
'நித்திய கல்யாணி'யை
உன்னிடம் தந்தபோது
மௌனமாய்
பணக்கார ராமனாய்...
இன்று-
நானே ராமனாய் நின்று
'புதிய அடிமைகளை'
தருகின்றேன்.
நான் சர்வாதிகாரியல்ல...
இருந்தும்-
நானும் ஒரு வகையில்
அடிமைதான்.
நான் தர்மிஷ்டப் புத்தனல்ல...
என்றும் -
முல்லையமுதனாய்
நிற்கின்றேன்.
அணைத்து மகிழ்ந்து பார்.
துணிவிருந்தால் -
தொட்டுப்பார் உன் -
விமர்சனப் பேனாவால்.



முல்லை அமுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியல்

சுவரின்
கோஷங்களைத் துடைத்தெறி.
புதிய சிந்தனைகளைத்
துப்பாக்கியாக்கு
விடுதலைமண்
உன் காலடியில் நிச்சயம்.

தலைமை எது என்பதல்ல
பிரச்சனை உனக்கு!
இங்கே —
தேவையானது உனது
இரத்தம் மட்டுமே!

தோழனே புறப்படு —
முரசம் கேட்கிறது
மனக் கடலில் கப்பல்விட்ட
தமிழன் —
கப்பலிலே அகதிகளாகினர்
தோழனே! விழித்தெழு!
விடியல் உன்
காலடியில்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதி அஞ்சலி

"எங்கிருந்து வீசுதோ?"
என்றே
பார்த்தபோது-

ஓ...எட்டயபுரத்துக்
கவிமலையிலிருந்து
நம் பாரதித் தென்றல்
கண்முன் —
வருகின்றதே...

எட்டயபுரத்தில் ஓர்
சிறு மெழுகுவத்தியாய்
எரிந்து கொண்டிருந்த
பாரதியை
நினைத்தபோது...இங்கு —
நாளும் பொழுதும்
எரிகின்ற எத்தனையோ —
தியாக பாரதிகள்
நினைவுக்கு வருகின்றார்கள்...

கற்புப் புதையலைக்
காக்க வேண்டியவர்கள்
புதையலையே
தொலைத்துவிட்டு
பரிதாபமாய் நிற்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியே — இங்கேதான்
உன் புதுமைப்பெண்
பாடல் —
தோற்றுவிடுகின்றது.
புரட்சிக் கயிற்றால்
பாரதத்தோரை —
இழுத்து வந்த தேவனே
உன்னுடனேயே —
நமது ஜனநாயகம்
எரிக்கப்பட்டுவிட்டது...

கலைத் தெய்வத்தின்
தரிசனத்திற்கு செல்ல வேண்டி
நாம் —
தடுமாறி நின்ற போது
வழிகாட்டினாய்.
உனக்குப் பின் —
பலபேர் ''வழி'' காட்டியதால்
உன் புனிதம்
மறந்துபோயிற்று......என்றும்
எனக்கோ —
நீயே வழிகாட்டி...!

இந்த —
நூற்றாண்டின் யுகபுருஷன் நீ...
இதனால் —
நீ பெருமைப்படலாம்...
செத்துவிட்ட லட்சியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம்......
விலை போனபின்...
தலைவா...!
நீ மீண்டும் பிறந்தால்
இரத்தக் கண்ணீரே வடிப்பாய்...!

பாரதி —
நீ விதைத்த
கவிதைக் கொழுந்துகள் தாம்
எனினும் நாம் விதைப்பது
எல்லாம்
தீக் கொழுந்துகளாகட்டும்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலிக்கு . . . கண்ணீர்!

இளமை தேவனின்
காதல் அரங்கேற்றத்திற்கு
விருந்தாளியாக
வருவதாக சொன்ன காரிகையே
நீ மட்டும் ஏன்
நெருப்புக்கு விருந்தாகிப் போனாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

?

தேர்தல் வருகிறது.
வாக்குறுதிப் புயல்
வந்துமோதி
எமை வீழ்த்தும்
மீண்டும்...
இராவணனே
வெற்றி கொள்வான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவம்

எங்களின்
ஆசைகள் மடிவதுமில்லை.
எங்கள் —
தவங்கள்
கலைவதுமில்லை...ஆதலால்
நாங்கள் கூட
விஸ்வாமித்திரர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரிகள்

வாழ்க்கை மைதானத்தில்
பட்டம் விடப்
புறப்பட்டவர்கள்
பட்டங்களையே
சுமந்து கொண்டு
திரும்பிவிட்டார்கள்
ஒரு வகையில்
இவர்கள் —
ராஜ்யமே இல்லா ராஜாக்கள்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசி

தேகத்தின் குளிர்
தாங்காமல்
அக்னிப் பிரவேசம்
செய்தாளாம் ஒருத்தி
பசி அக்னியின் வெம்மை
தாங்காமல்
நாங்கள் எதனிடம்
பிரவேசம் செய்வது...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபதம்

இந்த —
மண்ணின் மைந்தர்களின்
முத்தங்கள்
தேசத்துக்கே......!
மங்கையின் அணைப்பில்
கிடந்தவர்களே
எழுந்திருங்கள்......!
பாரதி நூற்றாண்டிலாவது
சபதம்
எடுத்துக் கொள்வோம்
அடிமை விலங்கை
நொருக்குவோமென்று...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களில் . . ?

அன்பே —
உன்னைப்போய்
மெழுகுவர்த்தி
என்றேனே...இப்போது
புரிகிறது......
என்பணப்பை உருகியதால்
நீயுமொரு
ஜாதி மெழுகுவர்த்தி என்று. . !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அடிமைகள்

நேற்றைய இரவில்
தீப்பிடித்த இந்த கிராமம்
இன்றும் தீப்பிடிக்கலாம்
இல்லாமலும் போகலாம்!
இந்த இரவின்கதை
அவர்களதுவாகலாம்
விரைந்துவரும் —
விடியல் பொழுதுகளில் —
இரவில் நடந்த
இராணுவப் பிரகடனங்களை
கிழித்தெறிந்து நிமிர்ந்துகொள்!
விடியல் பறவைகளின் ராகங்கள்
நெஞ்சில் ஒலிக்கும்
நீ நெஞ்சில் எழுதிய
புதிய அடிமைகளின் எழுச்சி
வாசகங்களை —
இங்கே விரித்துவை . !
சிவப்பாய் விடியும் புதிய பூமிக்கு
உனது —
ராஜவணக்கத்தை இப்போதே—
செலுத்திவிடு —
விடியும்போது நிச்சயம் நீ
இல்லாமலும் போகலாம்
எனினும்...
உனது மரண வாசகங்கள்
என்றும் வரலாருய் பதியப்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை நட்சத்திரம்

காற்று எழுந்து பேசமறுத்த
இந்த இரவில்
விண்கூவும் பட்டம் கூட
தொலைதூரம்
தொலைந்துதான் போனது!
வானம்கூட
எங்களைப் போலத்தான்
அழுதுவடிந்தது!
இலங்கை ஒரு இருண்டயுகமென
நாளைய
பள்ளிச்சிறுவன் பாடம்படிப்பான்
இருபதாம் நூற்றாண்டின்
ஹிட்லரால்
எங்களின் நூல்நிலையம்
தெருவீதியில் பிணமாய் எரிந்தது
இந்த —
மண்ணும் நமக்கானதுதான்
இருந்தும் நமக்கு நாமே
அந்நியமாகிப்போனோம்
வீதியில் இறங்குதல்
மரணபயமாகக் கருதி
கதவடைப்பு செய்கின்ற
மனிதர்களை —
நிச்சயம் கொன்றேவருக
என விண்ணப்பித்துக் கொள்ளும்
அரசபீட தலைவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத் திருவிழாவில் காணுமல்
போகிறவர்கள் நம்து
சொந்தங்களே!
பரதத்தின் கண்ணீர்த் துளி
இலங்கை எனில் —
இந்து மாகடலே கணப்பொழுது
சிலிர்த்துவிடு...!
எல்லாமே முற்றுப்பெறட்டும்.!!
எங்கள் மண்ணின்
கீதங்களை என்றும் மீட்டுகின்ற
வீணைக்கரங்களை துவம்சம்
செய்தது யார்?
கூடுகட்டிவாழ்ந்த
கானல் பறவைகளை
வெட்டுவைத்துத் தகர்த்த
மொத்த வியாபாரிகளே...!
காலம் மாறினுல்...
வானத்து நட்சத்திரங்கள் கூட
நமது கையில்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பம்

தேன் நிலவுக்கு
தேனைக் —
கொண்டுபோக
மறந்ததினுல்
இன்னும்தான்
நிலவுகள் இனிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்சித் தீவு

ஒரு நாளில்
சிலம்பின் செல்வி
மதுரையை எரித்தாள்...
இங்கோ—
பொன்னியின் புதல்வி
இலங்கையை எரிப்பாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை + கனவுகள்

வானத்து நட்சத்திரங்களே!
உங்களிடம்
வைத்திருக்கச் சொல்லித்தந்த
நம்பிக்கைகளை
வெண்முகில் தேவதைகளிடம்
கொடுத்துவிடு!
எம்மை ஏமாற்றிஞல் எப்படி?

வாழ்க்கைக் கனவுகளை
மறைத்துவிட்டு
இதயக் கதவை மட்டும்
திறந்தால் எப்படி?

வாழ்வின் ராகங்களை
மீட்டி முடிப்பதற்கு முன்பே
தாளங்களை ஓடிவிடச் செய்தால்
எப்படி...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதியின் விளிம்பில் நாம்

இராணுவத்தின் பாதுகாப்பில்
இங்கே —
செய்திகள் வாசிப்பது
தமிழன்!

எமனின் கரங்களில்
எழுதும்
எங்கள் தலைவிதிகளை
இவர்களால்
எழுதமுடிகிறது!
தமிழன் —
இதை அறிக! அறிக!!

தமிழனின் இனிமை எழுதி
எமையழைத்த
மேய்ப்பரே!
எங்களின் கனவுகளை
ஆழப் புதைத்துவிட்டு
புதிய யாப்பில் —
எல்லாமற்றவர்களாக்கி
நடத்தும் நாடகம்
எந்த அரங்கத்திற்காக!

யுத்தமா? சமாதானமா?
அன்றைய வார்த்தைகளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை —
புரட்சிவாதிகளாக்கிற்று!

மீண்டும்மொரு இராவணனே
இங்கு —
பிறந்துளதுண்மையெனில்
அது —
இவனே! இவனே!!

பூக்களாய் மலர்வதில்லை
சிந்தனை வெளிச்சத்தில் —
துப்பாக்கிகளின் உறுமலில்
வெடிப்பதுவே புரட்சி
அறிக! நீ அறிக!!

விரைவாய்...விரைவாய்...
விடிந்துகொண்டிருக்கும
இந்த —
இரவின் பொழுதுகளையுனது
சூரியகரங்களால்
துடைத்துவிடு!
தூங்கிக் கிடந்த நாட்களை
நொடியில் மறந்துவிடு —
விழித்தெழு! விழித்தெழு!!

நாளிது நாளிது
உனது வீச்சில்தானே —
எங்களின் விடியல்
இனிதாய் விடியும்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவள்

நெஞ்சை வரைந்தவள்
தனது —
நெஞ்சையே தந்தவள்
இன்று
நெஞ்சையே எரித்தவள்
ஓவியம்... ஓவியம்...
கண்ணில் வரைந்தது
காவியம்... காவியம்...
நீ என் —
நெஞ்சில் வரைந்தது.

பிரிவு
பொதுசன நூலக சேவை
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரியத்துக்குரிய**

**ஜனநாயகமே.....**

உனது —
பார்வைக் காலம்
கரைந்து போவது
எந்தவிடியலுக்காக...?

உனது
புன்னகைப் புரு
எந்த சமாதனத்திற்கு
தூது சென்றது...?

யுத்தபேரிகை முழங்க
சாவைத் தேடி
இதயத்தை பறி கொடுத்துவிட்டு
தனியே —
பார்வைத் தரிசனத்தையும்
புன்னகைக் கோபுரத்தையும்
பார்த்துக் கொண்டிருப்பது
எத்தனை நாளைக்கோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைகூவல்

சண்டைக்கு வாறியா —
இது ஒரு அறைகூவல்;
மாற்றான் வேலியை
தள்ளிப் போடுவதுவும்
ஒருவகை அறைகூவல்;
தமிழ்பண்ணின் —
உரிமைகளைத் தீயிலிட்டுவிட்டு
யுத்தமா? சமாதானமா?
என்பதும்
அறை கூவலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயான பூமி

ஜனநாயக வாதிகளின்
ஊர்வலத்தில் —
எஞ்சிப்போவது —
மயானபூமியின்
சாம்பல்தலைகளே…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41300

## மழை

மழையே மெத்தப்பெய்
மனிதப்பூச்சிகள்
புறுபுறுத்தன...!
வேள்விகள் — பூஜைகள்
இப்போ —
மழைவந்தது
வெள்ளம் தொடர்ந்தது
மனிதப் பூச்சிகள்
புறுபுறுத்தன
'சனியன் மழை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயும் நானும் ஒன்று . . !

வறுமைச் சிம்மாசனத்தில்
இருந்துகொண்டு
துன்பராஜ்ஜத்தை
ஆள்கின்ற நாங்கள் கூட
இந்நாட்டு மன்னர்கள்தான்...!

துன்பப் பெற்றோருக்கு
பிறந்து
வறுமைப் பாதுகாப்பில்
வளர்கின்ற
நம்மைப் பார்த்து
யார் சொன்னது
அனாதைகளென்று?

வானக் கூட்டில்
திசைமாறிப்போன
வெண்ணிலவு நங்கையே
நீயும் நானும் ஒரு ஜாதிதான்
இருந்தும் உன்னைப் போல்
நினைத்தமாத்திரத்தில் என்னால்
பூச்சூட முடியவில்லை...
பொட்டிடமுடியவில்லை...
ஏனெனில் —
நானிருப்பது சமுதாயக்கூட்டில்
நீயோ உயரத்தில் நானோ......?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அரசு......

'இருண்டகண்டம்'
ஐந்தில் படித்தது
ஐம்பதில் தான் புரிந்தது
நமது நாடுதான்......
சப்பாத்துக்களின் பயங்கர ஒலி—
ஜீப்புகளின் உறுமல் ஒலி —
எங்கும் —
நெருப்பு மலைகளாலான
மயானக்காடே
நமது தரிசனம்...!
எமது நாடே
எனக்குப் புரிகின்ற
'இருண்டகண்டம்'
இதை —
யாருக்கு சொல்வது...!
யாரிடம் சொல்வது...!
யார்தான் சொல்வது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்கவிதை

எந்தன்
கனவுப்புஸ்பத்தை
மலர்த்தி... மலர்த்தி...
புணர்ச்சிக் கவிதைகள்
நீ எழுதுகின்றாய்...
இதயக் கருப்பையில்
சிந்தனை அணுக்கள்
சங்கமித்து —
நினைவுக் கருவாகி
மண்ணில்
ஒருநாள் உருவாகும்...
அதுவே —
இந்த பசுமை மண்ணில்
நின்று பிரகாசிக்கும்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள்

வேதனைக்குளத்தில்
நீந்தத்தெரியாத மீன்களாய்
தத்தளிக்கின்ற மார்கழிமலர்கள்
நதிக்கரையோரத்து நாணலாய்
நாயகன் வரவிற்காய்
காத்திருக்கும் கன்னிப்பூக்கள்
கடலின் அலைகளில்
நுரைப்பூக்களாய் மலர்ந்து
கதிரவன் வரவிற்கு
கட்டியம் கூறுகின்ற
வெண்துகில் மலர்கள்
இருந்தும் நாங்கள்
பாதிமலர்களாகிப் போனதால்
பரிதாபத்துக்குரிய
பாலைவனத்துப் பூக்களானோம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரிசனம்

எனக்குத் தெரியும்
என் ஆத்மாவின்
தரிசனத்திற்காக
உங்களின் —
இரங்கல் கூட்டங்கள்
அனுதாபச் செய்திகள்
இன்றும்... இன்றும்...
என் உடலோ —
விடுதலைக்காய்
ரத்தபேரிகை முழங்க
என் நாட்டில்
சாய்ந்திருக்கும்
உங்கள் வரவு நாடி
என் ஆத்மா காத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு சரித்திரம்

நாற்படைகளின்
ஆர்ப்பாட்டம்...
மயான வெளிகளின்
தோற்றங்கள்...
மனித இதயங்களில்
சோகத்தின் விம்பங்கள்
இங்கு —
நடப்பது பாரதப்போரா?
இங்கு —
உருவாகப்போவது
பங்களாதேஷா? யாழ்தேஷா?
வைகறை வசந்தத்தின்
வரவிற்காக
மாவட்ட வேட்பாளர்களை
நிறுத்தும் எங்களுக்கு —
துப்பாக்கிச் சூடுகளும்
பெற்றோல் வெடிகளுமே
பரிசுகள்
ஐம்பத்தெட்டும்
எழுபத்தேழும்
எண்பத்திமூன்றும்
போய்த்தான் —
இன்னொரு சரித்திரம்
எழுதப்போகிறார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

நாளும் பொழுதும்
பணவர்க்கங்கள்
பால் பழங்களை
அபிஷேகிக்கும்...
எங்களையோ —
பட்டினி மழையே
அபிஷேகிக்கும்
அடிக்கடி வருகின்ற
தேர்தல் விழாவின்
வேட்பாளர் ஊர்வலங்கள்
தரிசனம் காட்டும்
ஆட்சிவந்ததும் —
பட்டினி அபிஷேகம்
தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுகள்

இமைகள் —
கனவுகளைத் தழுவும்...
இதயமோ
முள்ளளாய் நெருடும்
பாதைகள் பசுமை
என்றுணர்த்தும்
வாழ்க்கையோ...
மாயமாய்ப் பரந்திருக்கும்
உலகம் மட்டும்
நிர்மலமாய் பரந்திருக்கும்
இவைகள் —
நிழல்களல்ல
எதிர்காலத்தின் நிஜங்கள்
நாள்தோறும்
இருட்டே நம்மை
வரவேற்கும்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பின்னுரை

### *சமகாலத் தமிழ்க் கவிதை பற்றிய சில அவதானங்கள்*

மரபுக்கவிதை, புதுக்கவிதை, வசனகவிதை என்ற பாகுபாடுகளிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. விமர்சன வசதிக்காகவும் கவிதைகளை இவ்வாறு பிரிப்பது உதவியானதாக இல்லை. ஏனெனில் கவிதை விமர்சனம் என்று ஆரம்பிக்கிற போதே கவிதையையும் கவிதையல்லாதன வற்றையும் வேறு பிரித்தாக வேண்டியுள்ளது. ஆக, மொத்தத்தில் கவிதை எந்தப் பெயரைச் சூடிக்கொண்டாலும் கவிதையாகவும் கவிதையல் லாதன எந்தப் பெயரை சூடிக்கொண்டாலும் கவிதையல்லாதனவாகவுமே இருக்கும்.

கவிதையையும் கவிதை அல்லாதனவற்றை யும் வேறுபிரித்தறிய நவீன விஞ்ஞான கருவிகள் எதுவும் எங்களுக்குக் கிடைக்கப்போவதில்லை. இதுவரை காலத் தமிழ் விமர்சன வரலாற்றி லும் இந்தப் பிரச்சனை பற்றிய கவனம் இல்லை. பொதுவாகவே தமிழில் கவிதை விமர்சனம் குறிப்பிடத் தகுந்த மாதிரி இல்லை. ஈழத்தைப் பொறுத்தவரை நுஃமான், சண்முகம் சிவலிங் கம், மு. தளையசிங்கம், முருகையன், செ. யோக ராசா போன்றவர்களால் ஈழத்தமிழர் கவிதை யின் சிறப்பு அம்சங்கள், போக்கு என்பன அவ் வப்போது விமர்சிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல கவிதை எது? என்பது பற்றிய பிரச்சினை தர இயல்பு (Qualitative) தொடர்பானது என்பதால் எல்லோரும் ஒப்புக் கொள்ளத் தக்க ஒரு முடிவிற்கு எப்போதுமே வர இயலாது. ஒரு பொதுவான உடன்பாட்டில் சிறு பத்திரிகைச் சூழலும் வியாபாரச் சூழலும் (ஈழத்தில் வியாபாரச் சூழல் என்று ஒன்றைத் தெளிவாக அடையாளம் காண இயலாவிட்டாலும் வியாபாரச் சூழல் எழுத்தாளர்களின் மனநிலையில் நின்று தொழில் புரியும் எழுத்தாளர்கள் ஏராளம் உள்ளனர்.) ஒன்றிற்கொன்று எதிரான தளத்தில் இயங்குவதால் 'நல்ல' கவிதைகள் சிறு பத்திரிகைகளிலும் அல்லவை ஏனையவற்றிலும் உள்ளன எனக் கொள்வோம் சிறு பத்திரிகைகளில் கூட கவிதைகளில் 'நல்லவை' எவை? கவிதைகளின் தரவேறுபாடு, கவிதைகள் எவை என்பதில் கருத்து வேறுபாடுகள் உண்டு. ஒரே கவிஞரிடத்திலிருந்துகூட கவிதைகளும், கவிதை அல்லாதனவும் வருகின்றன. எனவே கவிதையையும் கவிதையல்லாதனவற்றையும், பிறகு கவிதைகளிலும் தரவேறுபாடுகளை இனங்காண்பது சிக்கலானதாகும்.

வேறுவேறு சமூகச் சூழல்கள், கவிஞர்கள் இயங்குகின்ற தளம், அவர்களுடைய ஈடுபாடு போன்ற அம்சங்களெல்லாம் இப் பிரச்சனையை இன்னும் ஆழமாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய ஈழத்துக் கவிதையும் தமிழகக் கவிதையும் தத்தம் பிரதானமான போக்கில் வேறுபட்டுவிட்டன. ஈழத்துச் சமூக யதார்த்தமும், தமிழகச் சமூக யதார்த்தமும் இன்று கொண்டுள்ள வேறுபட்ட அம்சங்களின் விளைவு இது. இப்பிரதான போக்கினை விடத் துணையாகக் காணப்படுகிற போக்குகள் ஈழம், தமிழகம் இரண்டிற்கும் ஒரு வகை மாதிரியாகவே உள்ளன உதாரணமாக-

(அ) யாப்போடு வருபவை.

இயந்திரப் பாங்கானவை, கல் அடுக்கியது மாதிரி, விட்டு விட்டு வரட்டுச் சொற் சேர்க்கை.

'வண் என்பார் ரூ வுமென்பார்;
வட் ஈஸ் த மற்றர் என்பார்...'

இப்படி இந்தக் 'கவிதை'த் துண்டை நீங்கள் விரும்பியபடி,

எண் என்பார் எழுத்துமென்பார்
ஏட்டிலே சுரைக்காய் என்பார்
கண் என்பார் கழுத்துமென்பார்
கட்டிளங் கன்னி என்பார்
பெண்..........................
..............................
புண்..........................
..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றமாதிரியோ, வேறெப்படியோ நீட்டிக் கொண்டு செல்லலாம். இந்த வகைக் கவிஞர்கள் தான் தமிழன்னையின் திருவடிகளில் ஏராளமாக உள்ளார்கள்.

(ஆ) சொற்களை மேலிருந்து கீழ் எழுதிவிட்டும், அபத்தமான படிமங்கள், செயற்கையான சொற் சேர்க்கைகள் உடன் துணுக்குகளுக்கும் நகைச் சுவைத் துண்டுகளுக்கும் கவிதைக்கும் வேறுபாடு அறியாத திருக்கூட்டம். (வசந்தகால மின்னல் கள்?) வீரகேசரி, வாரவெளியீடு, சிந்தாமணி மல்லிகை போன்ற பத்திரிகைகளிலும் சஞ்சிகை களிலும் ஏராளம் உதாரணம் கிடைக்கும்.

இவ்விரண்டு துணைப் போக்குகளுக்குமிடையே உயிர்ப்புடன், தமிழ்க் கவிதையை புதிய கட்டத் துக்கு நகர்த்தி விட்ட பிரதான போக்கை நான் இனங் காண்கிறேன்.

மஹாகவி, நீலாவணன், முருகையன் வழி நுஃமான், சண்முகம், சிவலிங்கம், தா. இராம லிங்கம்; பிறகு யேசுராசா, ஜெயபாலன், சிவ சேகரம் என்றும் அதற்கப்பால் எச். எம். பாறூக் ஹம்சத்வனி, ஆதவன், சு. வில்வரத்தினம், சபே சன், பாலசூரியன், ஊர்வசி என்றும் இப் போக் கைப் பிரதிபலிக்கும் கவிஞர்களை அறிய முடிகி றது. இவர்களோடு இன்னும் பலரும் சேர்ந்து கொள்ள இடம் இருக்கிறது. இப்போக்கை அண்

4130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்துக் கொண்டு வரும் முல்லையூரான் போன்ற கவிஞர்களும் உள்ளனர்.

இப் பிரதான போக்கின் சிறப்பு அம்சம் கவிதைகளின் சமகாலத் தன்மை. அரசியற் தொனி இவற்றோடு கவிதையைச் சொல்லும் பாணியில் அல்லாது (NARRATION) நிகழ்த்தும் பாணியில் கட்புலச் சித்தரிப்புக்களூடாகக் கொண்டு செல்லுதல் ஆகும்.

இப் பிரதான போக்கின் பாதிப்புக்குட்பட்டு அடக்குமுறை பற்றி அல்லது அடக்கு முறைக்கு எதிராக எழுதித்தான் ஆகவேண்டும் என்பது இப்போது பல எழுத்தாளர்களின் நாகரீகமாகி விட்டது. சமூகப் பிரச்னை என்று ஒன்றை மட்டுமே வலியுறுத்தி சுலோக நடையோடு கவித்துவம் காயடிக்கப்பட்ட ஒரு கவிதைப் பரம்பரை கைலாசபதி போன்ற விமர்சகர்களால் உருவானதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

இன்றும், குறிப்பிட்ட அரசியற் சூழலில் ஒரேமாதிரியான (STEREOHSPED) இலக்கியம் உருவாகிற ஆபத்து ஏற்பட்டுள்ளதோ என ஐயுறுகின்றேன். குறித்த ஒரு சூழலில் முனைப்புப் பெறும் போக்கு, அல்லது பாணி எதுவெனக் கண்டு அதனையொட்டி 'இலக்கியம்' தயாரிக்கும் வியாபாரச் சூழல் எழுந்து மனோபாவங்கொண்ட எழுத்தாளர்கள் கவிஞர்களால் இலக்கியம் களங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்பணிந்த செய்யுள்களில் இருந்து நவீன கவிதை பிறப்பெடுத்த பிறகு, இன்று புதுக் கவிதை என்ற பெயரில் கவிதை எவ்வளவு தூரம் சிரச்சேதம் செய்யப்பட்டு வருகிறது என்பது நாம் அறிந்ததே இது போலவே விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துவது போல இன்றைய சூழலில் எழுத்துக்கள் தோன்றும் அபாயம் செ. யோகநாதன், செ. கணேசலிங்கன் போன்றவர்களால் ஏற்பட்டுள்ளது.

கவிதையில் இம்மாதிரியான 'அசம்பாவிதங்கள்' ஏதும் இதுவரை இல்லை எனினும் எச்சரிக்கையாக இருப்பது தமிழுக்கும் நல்லது.

சேரன்

06-12-1983.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராகிறது!

பண்டைத் தமிழ்ப் புதையல்களிலிருந்து
அபகரிக்கப்பட்டுப் படைக்கப்பட்ட

# தமிழமுதம்

இது ஒரு [illegible] பிரசுரம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

118840

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org